மாகாணக் கல்வித் திணைக்களம் வடக்கு மாகாணம்

**Provincial Department of Education, Northern Province**

இரண்டாந்தவணைப் பரீட்சை - 2022

| தரம் :- 11 | புவியியல் | 61 | T | I | II | 3.00 மணித்தியாலம் மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள் |
|---|---|---|---|---|---|---|

**வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும், விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக**

**கவனிக்க**

- ❖ இவ் வினாத்தாள் 40 வினாக்களைக் கொண்டது.
- ❖ ஒவ்வொரு வினாவுக்கும் வழங்கப்பட்டடுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக எல்லா வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலேயே விடை எழுதுக.

புவியியல் 1

- **1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை அடைப்புக் குறியினுள்ளே உள்ளவற்றில் இருந்து தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

1. வளிமண்டலம் தாவரங்களின் ஒளித்தொகுப்பிற்குத் தேவையான..........................வாயுவை வழங்குகின்றது.
   (ஒட்சிசன்/ காபனீரொட்சைட்/நைதரசன்)
2. புவியோட்டிலிருந்து மூடியைப் பிரிக்கும் எல்லை ..................................ஆகும்.
   (மோகோவிச்/ கூற்றன் பேர்க்/ கொன்ராட்)
3. உலகின் மிக உயரத்தில் ................................ஏரி அமைந்துள்ளது
   (அயர் /பைக்கால்/தித்திக்காகா)
4. .............................................காலநிலை இடைவெப்ப காலநிலையின் விசேட அம்சமாகும்.
   (மத்தியதரை/மென்சூன்/தூந்திரா)
5. உலகில் அதிகளவான உற்பத்தி செய்யப்படுவதும், நுகரப்படுவதுமான தானியம்.......................... ஆகும்.
   (நெல்/சோளம்/கோதுமை)

- **6 தொடக்கம் 10 வரையுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் (ச) எனவும், பிழையாயின் (பி) ஐயும் சுற்றி வட்டம் வரைக**

6. இலங்கை இந்தோ அவுஸ்ரேலியத் தகட்டில் அமைந்துள்ள ஒரு நாடாகும். ச/பி
7. மாறன் மண்டலத்தில் கடல் மட்டத்திலிருந்து மேலே செல்லச் செல்ல வெப்பநிலை வீழ்ச்சியடைந்து செல்வது சூழல் நழுவு வீதம் எனப்படும். ச/பி
8. உலகின் அயன வலயப் பகுதிகளில் பாற்பண்ணைகள் அதிகளவில் பரம்பிக் காணப்படுகின்றன. ச/பி

9. இலங்கையின் யாழ்ப்பாணக்குடா நாட்டிலும் வடமேற்குக் கரையோரங்களிலும் பளிங்கடுக்குப் பாறைகள் பரந்துள்ளன. ச/பி


10. இலங்கையில் போக்குவரத்திற்காக அதிகளவு பெற்றோலியம் பயன்படுத்தப்படுகின்றது. ச/பி

- **11 தொடக்கம் 19 வரையுள்ள வினாக்களிலுள்ள வெற்றிடங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**

11. கண்டங்களின் எல்லையிலிருந்து சமுத்திரத்தை நோக்கி பரந்துள்ள ஆழங்குறைந்த கடற்பரப்பு................................................எனப்படும்.
12. ...............................................மண் படையில் தாய்ப் பாறைத்தன்மை முழுமையாகச் சிதைவடைந்து காணப்படுகின்றது.
13. மாத்தளையில்........................................பயிர்களுக்கான ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ளது.
14. பால்தரும் பசுக்களைப் பரிமாற்றிக் கொள்வதற்கு......................................வள மத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.
15. இறப்பர் பயிர்ச் செய்கைக்கான புதிய நிலங்கள் இலங்கையின் வவுனியா .........................................மாவட்டங்களில் பெறப்பட்டுள்ளன.

- **கீழே தரப்பட்டுள்ள வரைபினைப் பயன்படுத்தி 16 தொடக்கம் 19 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

வரைபில் நிலையம் ஒன்றின் வெப்பநிலை, மழைவீழ்ச்சிப் பரம்பல் எடுத்துக் காட்டப்படுகின்றது.




16. வரைபின் படி இப் பிரதேசத்தின் வெப்பநிலை. ....................... மாதத்தில் அதிகமாக இருந்துள்ளது.
17. ............................மாதத்தில் உயர்ந்தளவான மழை வீழ்ச்சி இப் பிரதேசத்திற்குக் கிடைக்கப் பெற்றுள்ளது.
18. இந் நிலையத்தில் குறைவான மழை வீழ்ச்சி................................மாத்தில் கிடைத்துள்ளது.
19. மழைவீழ்ச்சி, வெப்பநிலைப் பரம்பலை எடுதுக்காட்டும் இவ் வரைபு .......................வரைபடமாகும்.

- 20 தொடக்கம் 24 வரையுள்ள வினாக்களுக்கு அ,ஆ என இரண்டு நிரல்கள் தரப்பட்டுள்ளன. “அ” நிரலினுள்ள தகவல்களின் ஒழுங்கிக்கேற்ப “ஆ” நிரலிலுள்ள தகவல்கள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளமையைக் காட்டும் சரியான விடைக்குரிய இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

20.

| “அ” | “ஆ” |
|---|---|
| ஆசியாவிற்கு வெளியே நெல் பயிரிடப்படும் கண்டங்கள் | ஆசியாவிற்கு வெளியே நெல் பயிரிடப்படும் பிரதேசங்கள் |
| 1. ஆபிரிக்கா | A- போ நதி வடிநிலம் |
| 2. அவுஸ்ரேலியா | B- மறேடாலிங் பள்ளத்தாக்கு |
| 3. வட அமெரிக்கா | C- நைல்நதிக் கழிமுகம் |
| | D- மிசிசிப்பி பள்ளத்தாக்கு |

(1) C,B,D (2) B,C,S (3) A,D,C (4) C,A,D

21.

| “அ” | “ஆ” |
|---|---|
| பயிர்கள் | ஏற்றுமதிக் கிராமங்கள் |
| 1. வெற்றிலை | A. பொலன்னறுவை |
| 2. முந்திரி | B. தம்பதெனியா |
| 3. மிளகாய் | C. ராஜாங்கண |
| | D. கட்டுகம்பொல |

(1) ADC (2) DBC (3) BCA (4) DAB

22.

| “அ” | “ஆ” |
|---|---|
| குறியீடுகள் | நிறங்கள் |
| 1. பாடசாலை | A. பச்சை |
| 2. நெல் | B. கறுப்பு |
| 3. நீர்நிலைகள் | C. நீலம் |
| | D. சிவப்பு |

(1) CBD (2) DAC (3) BDA (4) DAB

23.

| "அ" | "ஆ" |
|---|---|
| ஏரிகள் | காணப்படும் கண்டங்கள் |
| 1. விக்டோரியா ஏரி | A- அவுஸ்ரேலியா |
| 2. லடோகா ஏரி | B- ஆபிரிக்கா |
| 3. அயர் ஏரி | C- ஐரோப்பா |
| | D- ஆசியா |

(1) BCA (2) ADC (3) BAC (4) CDA

24.

| "அ" | "ஆ" |
|---|---|
| பாறைகள் | உதாரணங்கள் |
| 1. உருமாறிய பாறை | A- பசோல்ட் |
| 2. அடையல் பாறை | B- மண் |
| 3. தீப்பாறை | C- நிலக்கரி |
| | D- சலவைக்கல் |

(1) CDA (2) DBC (3) BAD (4) DCA

- **25 தொடக்கம் 36 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டடுள்ள நான்கு விடைகளுள் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

25. கீழே A தொடக்கம் E வரை தரப்பட்டுள்ள தகவல்களிலிருந்து தெங்குப் பயிர் செய்கைக்குப் பொருத்தமான இரண்டு தகவல்களை மாத்திரம் கொண்டிருக்கும் விடையைத் தெரிவு செய்க.

A- உவர் தன்மையுள்ள மணற் பாங்கான பிரதேசம்

B- சிங்க முகத்திரையின் கீழ் உலகின் ஆதரவைப் பெற்றுள்ளது

C- ஈரவலயத்தில் மாத்திரம் செய்கை பண்ணப்படுகின்றது

D- எம்பிலிப் பிட்டியவில் ஆராய்ச்சி நிலையம் அமைந்தள்ளது.

E- பாரிய அளவில் இயந்திர மயமாக்கல்

(1) A, D (2) B,C (3) C,D (4) A,C

26. ஆழமான சமுத்திரப் பகுதிகளில் எரிமலைச் செயற்பாடுகளின் காரணமாக உருவாகிய தீவுகளில் ஒன்று?

(1) சாடினியா (2) தாஸ்மானியா (3) ஹவாய் (4) யாவா

27. ஐரோப்பாவின் இரண்டாவது நீளமான டான்யூப் நதியின் ஆற்று முகம் அமைந்திருப்பது?

(1) கஸ்பியன் கடலில் (2) கருங்கடலில்

(3) மத்தியதரைக் கடலில் (4) செங்கடலில்

28. இலங்கையில் நெல் அதிகளவு செய்கை பண்ணப்படும் காலநிலை வலயங்கள்?

(1) வரண்டவலயம், இடைவலயம்

(2) வரண்ட வலயம், ஈரவலயம்

(3) ஈரவலயம். இடைமாறு வலயம்

(4) மலைப்பகுதிகள், ஈரவலயம்

29. படிவுவீழ்ச்சி மூலம் புவியை வந்தடைந்து நிலத்தினுள் ஊடுவடிந்து சேமிக்கப்படும் நீர்?

(1) கழுவு நீரோட்டம் (2) வெந்நீர்

(3) தரைக்கீழ் நீர் (4) மேற்பரப்பு நீர்

30. 1994 நவம்பர் 16ஆம் திகதி முதல் உலகம் முழுவதும் நடைமுறைக்கு வந்த சட்டம்

(1) சர்வதேச சூழல் சட்டம்

(2) சர்வதேச சமுத்திர சட்டம்

(3) சர்தேச போதையொழிப்பு சட்டம்

(4) சர்வதேச கல்வி அறிவுச் சட்டம்

31. இலங்கையில் மலைநாட்டு ஈரவலயக் காடுகள் பரந்துள்ள பிரதேசங்களில் ஒன்று?

(1) தெதிய கல (2) கன்னெலிய

(3) சிங்கராஜவனம் (4) ஹோட்டன் சமவெளி

32. உலகில் உள்ள அகழிகளில் அதிகமானவை பரந்துள்ள சமுத்திரம்?

(1) ஆட்டிக் சமுத்திர் (2) பசுபிக் சமுத்திரம்

(3) இந்து சமுத்திரம் (4) அத்திலாந்திக் சமுத்திரம்

33. இலங்கையில் அதிகளவில் இடம் பெறும் மீன்பிடி?

(1) ஆழ்கடல் மீன்பிடி (2) நன்னீர் மீன்பிடி

(3) கரையோர மீன்பிடி (4) உவர்நீர் மீன்பிடி

34. தென்னை செய்யப்படும் நிலங்களில் ஊடுபயிராக பயிரிடப்படும் பிரதான பயிர்

(1) கறுவா (2) கோப்பி

(3) வாழை (4) அன்னாசி

35. நிலத்தில் ஒரு கிலோமீற்றர் பிரதேசம் 1:50,000 இடவிளக்கப் படத்தில் குறித்துக் காட்டப்படும் சென்ரிமீற்றரின் (CM) அளவு யாது?

(1) 2 cm (2) 3 cm (3) 5 cm (4) 10 cm

36. மேற்கு ஐரோப்பிய நாடுகளின் உரிமையாகக் காணப்பட்ட கைத்தொழிற் பொருட்களுக்கான சந்தை இன்று மாற்றமடைந்துள்ள பிரதேசம்?

(1) தென்னாசியா (2) கிழக்காசியா

(3) மேற்கு ஆசியா (4) வட அமெரிக்கா

37. உள்ளூரில் கிடைக்கின்ற மூலப்பொருட்களைப் பயன்படுத்தி இலங்கையில் வளர்சியடைந்தள்ள கைத்தொழில்?

(1) பீங்கான் கைத்தொழில் (3) இரத்தினக் கல் கைத்தொழில்

(2) காரியக் கைத்தொழில் (4) இலத்திரனியல் கைத்தொழில்

38. பிரம்பினை அடிப்படையாகக் கொண்ட இலங்கையின் குடிசைக் கைத்தொழில் விருத்தியடைந்துள்ள பிரதேசம்?

(1) கெக்கல (2) மெரட்டுவ (3) ரட்டவடுன்ன (4) பிலிமத்தலாவ

39. 1:50,000 இடவிளக்கப்படத்திற்கான மெற்றிக் அளியடைப்பினை அமைப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட மலை உச்சி?

(1) பேதுறுதாலகால மலை உச்சி
(2) சிவனொளிபாத மலை உச்சி
(3) நக்கிள்ஸ் மலை உச்சி
(4) கிரிகால்பொத்த மலைஉச்சி

40. இலங்கை சுற்றுலா அதிகார சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சுற்றலா வலயங்களின் எண்ணிக்கை யாது?


(1) 7 (2) 10 (3) 12 (4) 14

(40 x 1 = 40 புள்ளிகள்

- இவ் வினாத்தாள் **I,II** என்னும் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.
- பகுதி **I** இனுள்ள வினா கட்டாயமானது. அதில் (அ),(ஆ), (இ) ஆகிய மூன்று பிரிவுகளுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.
- பகுதி **II** இலிருந்து நான்கு விகாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.
- எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.

## பகுதி I

1. (அ) உமக்குத் தரப்பட்டுள்ள 1:50,000 என்ற அளவுத்திட்டதிலமைந்த இடவிளக்கப்படத்தின் பகுதியை நன்கு அவதானித்து. அதன் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. விடைகளை எழுதுவதற்கு உமக்கு வழங்கப்பட்டுள்ள தாளினைப் பயன்படுத்துக.




SCALE 1:50000

(i) தொடக்கம் (iv) வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையை அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

i. இலக்கம்(1) இனால் குறித்துக் காட்டப்பட்டிருப்பது.
(நெல் / வெளியரும்பியபாறை / பாதுகாக்கப்பட்டவனம்) (01 புள்ளி)

ii. இலக்கம் (2) இனால் குறித்துக் காட்டப்பட்டிருப்பது.
(வீட்டுத்தோட்டம் / கண்டல்தாவரம் / காடு) (01 புள்ளி)

iii. இலக்கம் (3) இனால் குறித்துக் காட்டப்பட்டிருப்பது.
(பாடசாலை / வரலாற்று முக்கியம் வாய்ந்த இடம் / வைத்தியசாலை) (01 புள்ளி)

iv. இலக்கம் (4) இனால் குறித்துக் காட்டப்பட்டிருப்பது.
(மாகாண எல்லை/ பிரதேச செயலகர் பிரிவு எல்லை/ கிராம சேவையாளர் பிரிவு எல்லை) (01 புள்ளி)

v. காட்டப்படும் நாற்பக்கல் பகுதியில் உள்ள பொதுச்சேவைகள் வளங்கும் இரண்டு நிறுவனங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

vi. B என்ற எழுத்தினால் குறித்துக்காட்டப்படுவது யாது? (01 புள்ளி)

**(அ) படப்பகுதி பற்றிய மூன்று கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன. இந்த ஒவ்வொரு கூற்றினையும் வாசித்து அவை சரியாயின் ச/√ எனவும் பிழையாயிக் பி/X எனவும் விடைதாளில் தரப்பட்டுள்ள வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.**

vii. படப்பகுதியின் தென்பகுதியில் அதிகளவில் செய்கை பண்ணப்படும் பெருந்தோட்டப் பயிர் தென்னை ஆகும். ச/பி (01 புள்ளி)

viii. இப் பிரதேசத்தின் வட மேற்கு மூலையை அண்மித்து பாதுகாக்கப்பட்ட வனம் உள்ளது. ச/பி (01 புள்ளி)

ix. இப் பிரதேசத்தின் கிழக்கு பகுதியில் தேயிலைப் பயிர்ச் செய்கை பரந்துள்ளது. ச/பி (01 புள்ளி)

**(ஆ) உமக்குத் தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தினைக் கவனமாக அவதானித்து, கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக உலகப் புறவுருவப்படத்தின் அருகே தரப்பட்டுள்ள நிரலைப் பயன்படுத்துக.**

(i) தொடக்கம் (iv) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் எதிரே மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. சரியான விடையினைக் குறிக்கும் எழுத்தைப் படத்திலிருந்து தெரிவு செய்து படத்தின் அருகிலுள்ள நிரலின் ஒவ்வொரு வினா இலக்கத்திற்கும் எதிரேயுள்ள கூட்டினுள் எழுதுக.

i. மிசூறி மிசிப்பி நதி (C), (D), (E)


ii. பெரியபிரிப்பு கற்பார் தொடர் (G), (N), (I)

iii. இலண்டன் நகரம் (P), (Q), (R)


iv. தக்கண மேட்டு நிலம் (S), (I), (U)

v. சகாரா பாலைவனம் (I), (K), (L)

(05 புள்ளிகள்)




| | |
|---|---|
| (i) | |
| (ii) | |
| (iii) | |
| (iv) | |
| (v) | |




| | |
|---|---|
| (i) | |
| (ii) | |
| (iii) | |
| (iv) | |
| (v) | |

(இ) உமக்குத் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தினை கவனமாக அவதானித்து, கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக இலங்கைப் புறவுருவப் படத்தின் அருகே தரப்பட்டுள்ள நிரலைப் பயன்படுத்துக.


| | | |
|---|---|---|
| i. | வில்பத்து சரணாலயம் | (P), (Q), (B) |
| ii. | சன அடர்த்தி குறைந்த முல்லைத்தீவு மாவட்டம் | (x), (Y), (Z) |
| iii. | காற்று சக்தி மின் நிலையம் பளை | (I), (U), (V) |
| iv. | இலமணைற் படிவு - புல்மோட்டை | (A), (B), (C) |
| v. | இறப்பர் - களுத்துறை மாவட்டம் | (D), (E), (F) |

(05 புள்ளிகள்)

## பகுதி II

2.

புவி அமைப்பின் படைகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.




i. A,B,C,D எனக் குறித்துக் காட்டப்பட்டிருக்கும் படைகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

ii. Bஎனக் குறித்துக் காட்டப்பட்டிருக்கும் படையின் பண்புகள் மூன்று குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

iii. A படையைப் பாதிக்கும் மானிட நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விபரிக்குக. (05 புள்ளிகள்)

3.

i. கோதுமைப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் பிரதான நான்கு நாடுகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

ii. கோதுமைப் பயிர் செய்கையின் விசேட பண்புகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

iii. இலங்கையின் விவசாயத்தில் காணப்படும் மூன்று சுற்றாடல் சார் பிரச்சினைகளை விபரிக்குக. (05 புள்ளிகள்)

4.

i. இலத்திரனியல் கைத்தொழிலில் தயாரிக்கப்படும் நான்கு உபகரணங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

ii. இலத்திரனியல் கைத்தொழிலின் போக்குகள் மூன்று தருக? (03 புள்ளிகள்)

iii. இலத்திரனியல் கைத்தொழிலின் மூன்று பிரச்சினைகளைக் குறிப்பிட்டு ஒன்றினை விபரிக்குக? (05 புள்ளிகள்)

5.

i. இலங்கை சுற்றுலா அதிகார சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சுற்றுலா வலயங்களில் நான்கினைத் தருக. (02 புள்ளிகள்)

ii. சுற்றுலாக் கைத்தொழிலின் மூன்று போக்குகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

iii. இலங்கைப் பொருளாதாரத்தில் கைத்தொழில் துறையின் மூன்று முக்கியத்துவத்தினைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக (05 புள்ளிகள்)

6.

i. இலங்கையின் புதிய சிறு ஏற்றுமதிப் பயிர்கள் நான்கினைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

ii. சிறு ஏற்றுமதிப் பயிர்களின் விருத்தியில் இலங்கை அரசு விசேட கவனம் செலுத்தி வருவதற்காக மூன்று காரணங்களைத் தருக. (03 புள்ளிகள்)

iii. இலங்கையில் பாற்பொருள் உற்பத்தியை அதிகரிப்பதனால் ஏற்படக் கூடிய மூன்று நன்மைகளை விபரிக்குக. (05 புள்ளிகள்)

7.

A. கீழே A,B எனத் தரப்பட்டடுள்ள கனிய வளங்களின் வகைப்பாட்டிற்கு உதாரணம் ஒவ்வொன்று தருக.

A. எரிபொருள் கனியம்

B. உலோகக் கனியம்

i. மண் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் மூன்று காரணிகளைத் தருக? (03 புள்ளிகள்)

ii. நீர் வளத்தின் (Water Resource) பாதுகாப்பதற்காக மேற் கொள்ளக் கூடிய வழி முறைகள் மூன்றினை விபரிக்குக? (05 புள்ளிகள்)

(5)

i. பொருத்தும் கைத்தொழிலாக விருத்தியடைந்து வருகின்ற மோட்டார் வாகனக் கைத்தொழிலுக்கு அடிப்படையாக இருக்கின்ற இரண்டு விடயங்களைத் தருக? (02 புள்ளிகள்)

ii. மோட்டார் வாகனக் கைத்தொழிலின் நவீன போக்குகள் மூன்று தருக? (03 புள்ளிகள்)

iii. இலங்கையின் மோட்டார் வாகனக் கைத்தொழிலில் காணப்படும் மூன்று பிரச்சினைகளை விபரிக்குக. (05 புள்ளிகள்)

வினா 1.

(i) ..........................................................................................

(ii) ..........................................................................................

(iii) ..........................................................................................

(iv) ..........................................................................................

(v) ..........................................................................................

..........................................................................................

(vi) ..........................................................................................

(vii) ..........................................................................................

(viii) ..........................................................................................

(ix) ..........................................................................................

10